# பணிவு + கனிவு + துணிவு = துணை முதல்வர்!

**‘உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சர் ஆகிறார்’ - கழகத் தவருக்கு தேனாக - கழக எதிரிகளுக்கு தேளாக வந்துள்ள அறிவிப்பு!** உதயநிதியே எதிர்பார்க்காத திருப்பங்களை அவர் வாழ்வில் சந்திக்கிறார்! 2021-ல் கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்ற காலகட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஒன்று, மூன்று ஆண்டுகள் சென்றபின் நிறைவேறியுள்ளது .

புதிதாக பதவி ஏற்றிடும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அமைச்சரவையில் உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்கப்படும் என்ற ஹேஸ்யங்கள் அப்போதே உருவாகின!

தேர்தலுக்கு முன் தமிழகம் முழுதும் சுற்றிச்சுழன்று ஓய்வறியாது அவர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதும் புதிய புதிய பிரச்சார வியூகங்கள் மூலம் அவர் மக்களை ஈர்த்ததும், மக்களோடு மக்களாக பயணித்து ஒவ்வொருவரும், குறிப்பாக தாய்மார்களும் அவரைத் தங்கள் வீட்டுப் பிள்ளையாக குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகக் கருதுமளவு அவரது தேர்தல் பிரச்சாரம் அமைந்தது!

ஒய்வின்றி நடந்த அந்தத் தொடர் பிரச்சாரங்களில் அவர் முகத்தில் சோர்வே காணமுடியவில்லை! பிரச்சார ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அவரது முகத்தில் இழையோடிய புன்னகை, கூட்டத்தினரை அவரோடு கட்டுண்டு போக வைத்தது!

பொதுவாக ஒரு தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்படுபவர், தனது தொகுதியில், தான் வெற்றி பெற வேண்டும் என்பதற்கு முழுநேர கவனம் செலுத்துவர்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியின் வேட்பாளராக உதயநிதி அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும், அவர், தான் போட்டியிட்ட தொகுதியில் வாக்கு சேகரிக்க ஒதுக்கிய காலம் குறைவே! கழக கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிக்காக அவர் சுற்றிச் சுழன்று வாக்கு கேட்க நேரம் ஒதுக்கி கழகத்தின் அத்தனை வேட்பாளர்களின் வெற்றிக்காக ஓடோடிச் சென்று பணியாற்றினார். தமிழினத் தலைவரின் பேரன், கழகத் தலைவர் தளபதியின் மகன், திரைப்பட நாயகன் போன்ற எந்தவித பந்தாவையும் அவரது நடவடிக்கைகளில் எள்ளளவும் காண இயலாத அளவுக்கு எளிமையாக இருந்ததில் கழகத்தினர் மட்டுமின்றி பொது மக்களும் கட்டுண்டனர்.



**தனக்கு தரப்பட்ட பொறுப்புகள் எதுவானாலும் அதனை ஏற்றத்துடன் நடத்திக் காட்டிடும் ஆற்றலை அவர் பெற்றிருந்தார். கட்சியில் இளைஞரணிச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டபோதும் எதிர்க்கட்சியினர் அவரை விமர்சித்தனர். விமர்சனங்களைப் பற்றி இன்று போல் அன்றும் அவர் கவலைப்படவில்லை. இந்த இயக்கத்தின் அடுத்த தலைமுறை கொள்கை உணர்ந்த படையாக உருவாக கட்சியின் மூத்த தலைவர்கள், திராவிட இயக்க சிந்தனையாளர்கள், வரலாற்று பேராசிரியர்களைக் கொண்டு பல பாசறைக் கூட்டங்கள் நடத்தினார்!**

அந்த இளைஞர்களில் ஒருவராக தானும் அமர்ந்து தனது கொள்கைத் தெளிவை கூர்தீட்டிக் கொண்டார். அடுத்த தலைமுறையின் கழகத் தளகர்த்தர்களாக இயங்கக்கூடிய ஆற்றலாளர்களை தலைமைக்கு அடையாளம் காட்ட பாலமாக செயல்பட்டார்.

கழகத்தின் மூத்த தலைவர்கள், முன்னோடிகளிடம் அவர் காட்டிடும் பணிவு மூலம் அவர்களது நல்லெண்ணத்தினை பெற்றார்! கழக முன்னோடிகளிடம் மரியாதை, ஒத்த தோழர்களிடம் உருவாக்கிக் கொண்டுள்ள தோழமை உணர்வு - தோழமைக் கட்சித் தலைவர்களிடம் அவர் காட்டிடும் அடக்கம் - இவற்றால் கழகத்தினர் மட்டுமின்றி, கழகத் தோழமைக் கட்சியினரிடமும் உதயநிதி குறித்து உயர்ந்த எண்ணம் உருவானது!

எதிராளிகளின் ஏளனப் பேச்சுக்கு அவர் பதில் அளித்த பாங்கு பலரை பிரம்மிக்க வைத்தது.

ஒரு முறை முன்னாள் அமைச்சரும் அ.தி.மு.க.வின் செய்தி தொடர்பாளருமான ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் பேசிய போது, ‘உதயநிதி ஒரு சாக்லெட் பாய்’ - என அவரை குறைத்து எடை போட்டு கருத்து தெரிவித்தார். அது குறித்து செய்தியாளர்கள் உதயநிதியிடம் கேட்டபோது, **“நான் சாக்லெட் பாய்தான்; ஆனால் அவரைப் போல பிளே பாய் அல்ல”** எனக் கூறிய ‘நச்’ பதிலில் அவரிடம் கலைஞரின் குறும்பு வெளிப்பட்டது. அவர் தெறிக்கத் தெறிக்க அளித்த அந்தப் பதில் மூலம் ஜெயக்குமாரை ஆட்டம் காண வைத்தார்.

ஒரு முறை சட்டமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தான் சட்டமன்றம் முடிந்து காரில் ஏறச் சென்றபோது, தனது கார் என நினைத்து உதயநிதி காரில் ஏறப் போய்விட்டதாக குறிப்பிட்டதைத் தொடர்ந்து, பின்னர் பேசிய உதயநிதி **“நல்லவேலையாக காரில் ஏறி அறிவாலயம் செல்லாமல் போனீர்களே”** எனக் குறிப்பிட்ட போது மொத்த அவையே கலகலப்பாகி கைதட்டியது! அந்த அளவு நகைச்சுவை உணர்வு கொண்ட சொல்லாற்றல் மிக்கவர் உதயநிதி!



## சிலந்தி

**தான் ஏற்ற பணிகளை செம்மையாக, பலரை வியக்க வைக்குமளவு செய்து முடிக்கும் ஆற்றலில் அவரது தந்தை தளபதிக்கு ஒப்பானவர் என்பதை அவர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று சென்னையில் நடத்திய 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி மூலம் நிரூபித்துக்காட்டினார்!**

**பிரதமர் முதல் பங்கேற்ற அனைத்துலக வீரர்கள் அனைவரும் பாராட்டிடும் வகையில் பணி புரிந்து தான் ஏற்ற பொறுப்புக்கு பெருமை சேர்த்தார். அடுத்து சென்னையில் ஃபார்முலா 4 கார் ரேஸ் நடத்தி தமிழ்நாட்டை மட்டுமல்ல; இந்தியாவையே வியக்க வைத்து பலரது பாராட்டைப் பெற்றார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரகம் என்பது வெளியே தெரியாத துறையாக இயங்கி வந்ததை அமைச்சராக உதயநிதி பொறுப்பேற்று அந்தத் துறை மூலமும் அசுர சாதனைகளைப் புரிய முடியும் என எடுத்துக் காட்டி அந்தத் துறைக்கு பெருமை சேர்த்தார்.

மக்கள் பிரதிநிதியாக சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் கொரோனா தொற்றின்போது அவர் அந்தத் தொகுதியில் சுற்றி சுற்றி, தெருத் தெருவாக, வீடு வீடாகச் சென்று தனக்கு வாக்களித்த மக்களைச் சந்தித்தும், சுகாதார சீர்கேடுகளால் தொற்றின் பரவல் தீவிரமாகக் கூடாது என்பதற்காகவும் அந்தத் தொகுதியில் சீர்படுத்திய காட்சிகள் மறக்கக்கூடியதா? “உதய் அண்ணா, உதய் அண்ணா” என்று உரிமை யுடன் அந்தத் தொகுதி பெண்கள், தங்கள் சகோதரனை அழைத்து தங்கள் குறைகளை எடுத்துக் கூற, அதனை உடனுக்குடன் சீர்செய்த பாங்கு சமூக வலைத் தளங்களில் வைரலாக ஓடியதே! இப்போது நினைத்துப் பார்க்கும் போது “உதய் அண்ணா, உதய் அண்ணா” - என அந்தச் சகோதரி அழைத்த குரல் நமது செவிகளில் ரீங்காரமிடுகிறதே.

**“அருமைத் தம்பி,**
**மக்களிடம் சென்றிடு**
**அவர்களோடு வாழ்ந்திடு**
**அவர்களிடமிருந்து**
**அறிந்திடு**
**அவர்களை நேசித்திடு**
**அவர்களுக்கு உன்**
**உழைப்பை நல்கிடு**
**அவர்களோடு இணைந்து**
**அவர்களுக்காக திட்டமிடு!”**

எனப் பேரறிஞர் பெருந்தகை நம்மை எல்லாம் ஆளாக்கிய ஆசான் அண்ணாவின் அடியொற்றி நடந்திடுகிறார் உதயநிதி என்பது எத்தனை நிதர்சனமான உண்மை!

‘உதயநிதிக்கு துணை முதலமைச்சர் பதவியா?’- என அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சியினர் அலறித் துடித்திடும் வகையில், உதயநிதி இனி எடுத்துரைக்கும் ஒவ்வொரு அடியும் **‘வாமன அடியாக’** இருக்குமளவு அவர் ஆற்றல் மற்றும் செயல்படும் திறன் இருக்கும், இருந்திடும் என இயக்கத்தினர் அனைவரும் இறுமாப்பு கொள்ளுமளவு அவர் பணிகள் பீடு நடை போடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

**காட்சிக் கெளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்”**
**(குறள்)**

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.

**(கலைஞர் உரை)**

**கோடிக்கணக்கான கழக உடன்பிறப்புகளின் அசைக்க முடியாத நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் உதயநிதி, அவர்களுடைய நம்பிக்கைக்கு அவர் தொடர்ந்து ஆற்றிடும் பணிகள் மூலம் மேலும் மேலும் வலுசேர்த்திடுவார் என்பதில் ஐயமில்லை!**